புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Puducherry - 605009.
Cell: 7810068421,9488420449

PRGI.NO.TNTAM/25/A1635 T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 181 | 05-01-2026 | திங்கள் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 181 | 05-01-2026 | Monday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## ஈரோட்டில் பாஜக விவசாய அணி சார்பில் இயற்கை வேளாண் கண்காட்சி..

### எம்எல்ஏக்கள் வானதி.. சரஸ்வதி தொடங்கி வைத்தனர்..



ஈரோடு. ஜன 05

பாரதிய ஜனதா கட்சி சார்பில் நேற்று ஈரோட்டில் இயற்கை வேளாண்மை கண்காட்சி நடைபெற்றது. மாநில பாரதிய ஜனதா கட்சி விவசாய அணி சார்பில் நேற்று ஈரோட்டில் இயற்கை வேளாண்மை கண்காட்சி நடைபெற்றது.

ஈரோடு மஞ்சள் மாநகரில், பாரதிய ஜனதா கட்சி விவசாய அணி சார்பில் நடைபெற உள்ள வேளாண் விவசாய மாநாட்டை முன்னிட்டு, இயற்கை வேளாண்மை கண்காட்சி ஈரோடு வில்லரசம்பட்டியில் உள்ள லட்சுமி துரைசாமி மகாலில் நேற்று இயற்கை வேளாண்மை கண்காட்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் பாரதிய ஜனதா கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் வானதி சீனிவாசன், டாக்டர் சி. சரஸ்வதி ஆகியோர் கலந்து கொண்டு கண்காட்சியை திறந்து வைத்து வேளாண்மை மற்றும் விவசாயத்தை பாதுகாப்பது குறித்தும், அவற்றின் முக்கியத்துவம் குறித்தும் கண்காட்சியில் பேசினர்.

இந்த இயற்கை வேளாண்மை கண்காட்சியில் நூற்றிற்கும் அரங்குகள் அமைக்கப்பட்டு, அதில் வேளாண் உற்பத்தி பொருட்கள், விவசாய உபகரணங்கள் மற்றும் வேளாண் இடுபொருட்கள் அரங்கத்தில் விவசாயிகளுக்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிகழ்ச்சியில் விவசாய அணியின் மாநில தலைவர் ஜிகே நாகராஜ், தெற்கு மாவட்ட தலைவர் எஸ் எம் செந்தில், மாநில விவசாய அணி செயலாளர் பன்னீர்செல்வம், விவசாய அணி மாவட்ட செயலாளர் கணேசன், தன்னார்வ தொண்டு நிறுவன மாநில செயலாளர் கிருத்திகா சிவக்குமார் உள்ளிட்ட பலர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்

## பொங்கல் பரிசு டோக்கன் விநியோகம் பணி தொடங்கியது

சென்னை. ஜன.5–

பொங்கல் பண்டிகையை பொதுமக்கள் மகிழ்ச்சியாக கொண்டாடும் வகையில் பொங்கல் பரிசு உடன் மூவாயிரம் ரூபாய் ரொக்கமும் வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று அறிவித்தார். பொங்கல் பரிசை சுமூகமாக விநியோகிக்க டோக்கன் முறையில் பொங்கல் பரிசு வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி தமிழகம் முழுவதும் பொங்கல் பரிசுக்கான டோக்கன் விநியோகம் செய்யும் பணி தொடங்கியது. சென்னையில் வீடு, வீடாக சென்று பொங்கல் பரிசுத் தொகுப்புக்கான டோக்கன் விநியோகிக்கும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். டோக்கனில் பொங்கல் பரிசு தொகை பெறும் நேரம், தேதியுடன் குறிப்பிடப்பட்டுள்ளது. டோக்கனில் குறிப்பிடப்பட்டுள்ள தேதி, நேரத்தில் சென்று பொங்கல் பரிசை பெற்றுக்கொள்ளலாம். “,

# தமிழ்நாட்டில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3000 ரொக்கப் பணம் வழங்கப்படும்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை: ஜன.5–

தமிழ்நாட்டில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3000 ரொக்கப் பணம் வழங்கப்படும் என்று முதல்வர் முக.ஸ்டாலின் அறிவித் துள்ளார். ஏற்கனவே பொங்கல் பரிசுத் தொகுப்பு அறிவிக்கப் பட்ட நிலையில் ரொக்கப்பரிசு அறிவித்துள்ளனர். 2.23 கோடி குடும்பங்களுக்கு தலா ரூ.3,000 பொங்கல் பரிசு வழங்கப்படும். இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் உள்ள குடும்பத்தினருக்கும் பொங்கல் பரிசாக ரூ.3,000 வழங்கப்படும்

இயற்கையின் முதன்மை வடிவாய் அமைந்த சூரியனுக்கும் உழவர்களின் உழைப்பிற்கு உறுதுணையாய் விளங்கும் கால்நடைகளுக்கும் உலக மக்களுக்கு உணவளித்துப் பசி பிணி போக்கும் விவசாயிகளுக்கும் நன்றி கூறி குடும்ப உறவுகள் ஒன்றிணைந்து உலகத் தமிழர்களால் பன்னெடுங் காலமாகக் கொண்டாடப்படும் பாரம் பரிய உன்னத விழா பொங்கல் திருநாள் ஆகும்.

பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடிட தமிழ்நாடு அரசு அனைத்து அரிசி குடும்ப அட்டை தாரர்களுக்கும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பு வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே அறிவித்துள்ளார்கள். இதன்மூலம் 2,22,91,710 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர் பயன்பெறுவர். மேலும், பொங்கல் திருநாளை முன்னிட்டு வழங்கப்படவுள்ள வேட்டி சேலைகள் அனைத்தும் எல்லா மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



பொங்கல் விழாவை மேலும் சிறப்பாக கொண்டாடிட அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் அனைத்து குடும்பங்களுக்கும் பொங்கல் ரொக்கப் பரிசாக ரூ.3000/ வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார். பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரொக்கப் பரிசு மொத்தம் ரூ.6936,17,47,959/ செலவில் வழங்கப்படும்.

பொங்கல் திருநாளுக்கு முன்பாக ரொக்கப் பரிசும், பொங்கல் பரிசுத் தொகுப்பும், வேட்டி சேலைகளும் அனைத்து நியாயவிலைக் கடைகள் வழியாக வழங்கிட அனைத்து ஏற்பாடுகளும் செய்ய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா !!

### ஆயிரம் நபர்களுக்கு திருப்பூர் மாநகராட்சி 36 வது வார்டு ராயபுரம் பகுதியில் அறுசுவை விருந்து பொதுமக்களுக்கு பிரியாணி வழங்கப்பட்டது!!




திருப்பூர் ராயபுரம். ஜனவரி:05

கல்வி நிலைய குழு தலைவர் 36வது வார்டு மாமன்ற உறுப்பினர், பெ. திவாகரன் BA.,MC, மற்றும் கருவம்பாளையம் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் குட்டிபாய் ஏற்பாட்டில்.

சூசையாபுரம் மேற்குப் பகுதி பன்னீர் செல்வம் படிப்பகம் அருகில் நடைபெற்ற பிறந்தநாள் விழாவில் திருப்பூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் மற்றும் தெற்கு மாநகரக் கழகச் செயலாளர் ஜி.ரி.ஜி. மு.நாகராசன் அவர்களும், பகுதி செயலாளர் பி .ஆர். செந்தில்குமார் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு பிரியாணி விருந்து வழங்கினர்... விழாவில் வார்டு நிர்வாகிகள்.

தினேஷ் ,பாண்டியன், சுதாகரன், ஜெயகிரி, ஏக்நாத், கிருஷ்ணமூர்த்தி, விஜயலட்சுமி, திவாகரன், ராஜேஸ்வரி, மற்றும் கழக நிர்வாகிகள் பகுதியின் பொது மக்களுக்கு அறுசுவை விருந்து வழங்கினர்.

## புதுக்கோட்டை, திருச்சியில் மத்திய மந்திரி அமித்ஷா பங்கேற்கும் நிகழ்ச்சிகள் விவரம்

திருச்சி ஜன 5

புதுக்கோட்டை, திருச்சியில் மத்திய மந்திரி அமித்ஷா பங்கேற்கும் நிகழ்ச்சிகள் விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருவரங்கம் ரெங்கநாதரை தரிசனம் செய்கிறார். பிறகு திருச்சியில் நடைபெறும் மோடி பொங்கல் விழாவை தொடங்கி வைத்து மத்திய மந்திரி அமித்ஷா பேசுகிறார்.

மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா இரண்டு நாட்கள் தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார். இதையொட்டி அந்தமான் தீவுக ளின் தலைநகர் போர்ட் பிளேர் விமான நிலையத்தில் இருந்து பாதுகாப்புதுறைக்கு சொந்தமான விமானம் மூலம் புறப்பட்டு 4ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.55 மணிக்கு திருச்சிக்கு வந்தார்.

திருச்சி விமான நிலையத்தில் இறங்கியதும் அங்கிருந்து ஹெலிகாப்டரில் புறப்பட்டு புதுக்கோட்டைக்கு செல்கிறார். புதுக்கோட்டை, பாலன் நகர், கருவேப்பிலான் கேட் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஹெலிகாப்டர் இறங்கு தளத்தில் அவரது ஹெலிகாப்டர் தரை இறங்குகியது.

பிரமாண்டான பொதுக் கூட்டம்: பிறகு அங்கிருந்து காரில் புறப்பட்டு ‘தமிழகம் தலை | நிமிர தமிழனின் பயணம்‘ என்ற தலைப்பிலான தமிழக பா.ஜனதா தலைவர்



நயினார் நாகேந்திரன் நடத்தும் யாத்திரை நிறைவு விழா பொதுக் கூட்டம் மேடைக்கு செல்கிறார்.பிறகு பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் மத்திய மந்திரி அமித்ஷா சிறப்புரை ஆற்றுகிறார் இந்த கூட்டத்தில் பாஜக மூத்த நிர்வாகிகள் மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியில் அங்கம் வகிக்கும் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி உள்ளிட்ட கூட்டணி கட்சி தலைவர்கள் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்கிறார்கள் பிறகு அமித்ஷா பேசி முடித்து விட்டு காரில் புறப்பட்டு திருச்சிக்கு வருகிறார். இரவு 8 மணி அளவில் திருச்சி கலெக்டர் அலுவலக சாலையில் உள்ள தனியார் ஓட்டலில் அவர் தங்கி இரவு ஓய்வு எடுப்பார்.

இன்று திங்கட்கிழமை காலை 10 மணி அளவில் தனியார் ஓட்டலில் இருந்து காரில் புறப்படும் அமித்ஷா திருவரங்கம் ரெங்கநாதர் கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்கிறார். சாமி தரிசனம் முடித்துவிட்டு அங்கிருந்து காரில் புறப்பட்டு மீண்டும் தனியார் ஓட்ட லுக்கு வருகிறார்.

அங்கு சுமார் ஒரு மணி நேர ஓய்விற்கு பின்னர் அங்கிருந்து கார் மூலம் புறப்பட்டு திருச்சி மன்னார்புரம் ராணுவ மைதானத்தில் நடைபெறும் பொங்கல் விழாவில் மதியம் 12 மணி முதல் 1 மணி வரை பங்கேற்கிறார்.

மதியம் 1.05 மணிக்கு அங்கிருந்து திருச்சி விமான நிலையத்திற்கு கார் மூலம் புறப்பட்டு செல்கிறார். திருச்சி விமானநிலையத்தில் இருந்து 1.20 மணிக்கு ராணுவ விமானம் மூலம் டெல்லிக்கு புறப்பட்டு செல்கிறார்.

மத்திய மந்திரி அமித்ஷா வருகையை முன்னிட்டு அவருக்கு உச்சகட்ட பாதுகாப்பான இசட் ப்ளஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டு உள்ளது. அவர் செல்லும் வழித்தடங்கள் ஹெலிப்பேடுகள் மற்றும் அமித்ஷா செல்லும் சாலை பாதைகளில் பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில் டெல்லியில் இருந்து மத்திய சிறப்பு புலனாய்வு குழு போலீஸ் அதிகாரிகள் வருகை தர உள்ளார்கள். இவர்கள் திருவரங்கம் ரங்கநாதர் கோவில் பகுதி மற்றும் திருச்சி விமான நிலைய பகுதி மற்றும் புதுக்கோட்டையில் பொதுக்கூட்டம் நடைபெறும் விழா மேடை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் ஆய்வு செய்ய இருக்கிறார்.

நாளை மறுநாள் ஐந்தாம் தேதி திருச்சி மன்னார்புரம் ராணுவ மைதானத்தில் நடைபெறும் மோடி பொங்கல் விழாவிற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.மைதானத்தில் 1008 பெண்கள் பொங்கல் வைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது மேலும் இங்கு பிரமாண்டமான மேடை அமைக்கப்பட்டு வருகிறது.மோடி பொங்கல் விழாவை தொடங்கி வைத்து விட்டு மத்திய மந்திரி அமித்ஷா அங்கு அமைக்கப்பட்டு இருக்கும் மேடையில் பேசுகிறார். மத்திய மந்திரி அமித்ஷா திருச்சி வருகையை முன்னிட்டு பாஜகவினர் உற்சாகம் அடைந்துள்ளனர்.

திருச்சி மற்றும் புதுகை மாவட்ட கலெக்டர்கள் , மாநகர மற்றும் மாவட்ட போலீசார் பாதுகாப்பு வழங்க ஒத்துழைக்கும் படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## மகளிர் விடியல் பயணம் பேருந்துகளை துவக்கி வைத்த அமைச்சர்கள்.



தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் சேலம் கோட்டம் எடப்பாடி கிளை வளாகத்தில் பொது மக்கள் பயன்பாட்டிற்காக பழைய நகரப் பேருந்துகளுக்கு மாற்றாக 63 புதிய மகளிர் விடியல் பயணப் பேருந்துகளை துவக்கி வைத்தும்,6 பேருந்துகள் புதிய பகுதிகளுக்கு வழித்தடம் நீட்டிப்பு செய்தும்,ஓமலூர்,தாரமங்கலம்,ஆத்தூர் ஆகிய கிளைகளிலிருந்து பல்வேறு பகுதிகளுக்கு கூடுதல் பேருந்து வசதிகளையும் மற்றும் புதிய எரிபொருள் சில்லறை விற்பனை நிலையத்தினையும் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்களுடன் இணைந்து துவக்கி வைத்த சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன். இந்நிகழ்வில் சேலம் மாவட்ட ஆட்சியர் ரா.பிருந்தா தேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி ஆகியோர்,துறைசார்ந்த அதிகாரிகள்,தொமுச நிர்வாகிகள்,உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,தொழிற்சங்க பிரதிநிதிகள்,பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஆர்.எல்.வி. மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மாநில மகளிர் அணி அமைப்பாளராக சமூக சேவகி S.வாசுகி நியமனம்!



திருமதி. வாசுகி

புதுச்சேரி:ஜன.5–

ஆர்.எல்.வி. மக்கள் முன்னேற்றக் கழகத்தை வலுப்படுத்தும் நோக்கில், புதுச்சேரியின் 30 சட்டமன்ற தொகுதிகளுக்கும் புதிய நிர்வாகிகளை நியமிக்க அக்கட்சியின் மாநிலத் தலைவர் ஆர்.எல். வெங்கட்ராமன் முடிவெடுத்துள்ளார். இதன் முதற்கட்டமாக கடந்த வாரம் 10 தொகுதிகளுக்கு தலைவர்கள் நியமிக்கப்பட்ட நிலையில், தற்போது கட்சியின் மிக முக்கியப் பொறுப்பான மாநில மகளிர் அணி அமைப்பாளர் அறிவிக்கப்பட்டுள்ளார்.

முக்கிய அறிவிப்பு:

ஆர்.எல்.வி. மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மாநில மகளிர் அணி அமைப்பாளராகப் பிரபல சமூக சேவகியும், கல்வியாளருமான திருமதி S.வாசுகி அவர்கள் நியமிக்கப்படுவதாக மாநிலத் தலைவர் ஆர்.எல். வெங்கட்ராமன் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

யார் இந்த S.வாசுகி? (சாதனைப் பட்டியல்):

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள திருமதி S.வாசுகி அவர்கள் பன்முகத்திறமை கொண்டவர்.

எம்.ஏ., பி.லிட் (M.A., B.Lit) பயின்றவர். தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவம் கொண்டவர்.

'அன்பு ஆதரவு இயற்கை' என்ற அமைப்பின் நிறுவனர். ஏழை எளிய மக்களின் கல்வி மற்றும் சமூக முன்னேற்றத் திற்காகத் தொடர்ந்து பாடுபடுபவர்.

சுற்றுச்சூழல் ஆர்வம்: இயற்கை வளத்தைப் பாதுகாக்க இதுவரை 20,200 மரக்கன்றுகளை நட்டுள்ளார். பள்ளிகளுக்கு விதைப் பந்துகள் வழங்கி மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தியவர்.

திறமைகள்: கவிதை எழுதுதல், விழிப்புணர்வுப் பாடல்கள் பாடுதல் என கலைத் துறையிலும் ஆர்வம் கொண்டவர்.

புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் வழங்கிய சாதனையாளர் விருது.

தீபம் தொலைக்காட்சியின் சிறந்த பெண்மணி விருது.

சாரதா கங்காதரன் கல்லூரியின் காமராஜர் விருது.

பாரதியாரின் அக்னிப் பறவை விருது மற்றும் சேவைச் சுடர் விருது.

தலைவரின் வேண்டுகோள்:

மாநிலத் தலைவர் ஆர்.எல். வெங்கட்ராமன் தனது அறிக்கையில், "சமூகப் பணியில் மிகுந்த ஆர்வமும், அர்ப்பணிப்பும் கொண்ட திருமதி S.வாசுகி அவர்களின் நியமனம் கட்சிக்கு கூடுதல் வலிமை சேர்க்கும். அவருக்கு மகளிர் அணியினரும், கழகத் தொண்டர்களும் முழு ஒத்துழைப்பு நல்கி, மக்கள் பணியாற்றிட அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்," எனக் குறிப்பிட்டுள்ளார்.

## "மறதி உங்களுக்குத்தான்! அவதூறு பரப்புவதை நிறுத்துங்கள்!"

# போலி மருந்து மற்றும் நிர்வாகத் தோல்விகள் குறித்து பாஜக NRC அரசுக்கு கடும் கண்டனம்



புதுச்சேரி:

புதுச்சேரி மாநில காங்கிரஸ் கட்சியின் கிழக்கு மாவட்டத் தலைவர் திரு. இரா. வேல்முருகன் அவர்கள் இன்று விடுத்துள்ள அறிக்கையில், ஆளும் ழிஸிசிஙியிறி கூட்டணி அரசின் செயல்பாடுகளையும், முன்னாள் முதல்வர் திரு. நாராயணசாமி அவர்கள் மீதான அவதூறுப் பிரச்சாரங்களையும் கடுமையாகச் சாடியுள்ளார்.

உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் அவர்கள் முன்னாள் முதல்வர் நாராயணசாமி அவர்களுக்கு 'செலக்டிவ் அம்னீசியா' (தேர்ந்தெடுத்த மறதி) என்று கூறியிருப்பது வேடிக்கையாக உள்ளது. உண்மையில் 2021 தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதிகளை மறந்த பிஜேபி நிர்வாகிகளுக்கே அந்த நோய் பிடித்துள்ளது.

2017ல் தான் போலி மருந்து ஆலைக்கு உரிமம் வழங்கப்பட்டது என அமைச்சர் கூறுவது அப்பட்டமான பொய். துறை ரீதியான உரிமம் வழங்க அந்தந்த அமைச்சருக்கே அதிகாரம் உண்டு. அப்போது சுகாதாரத்துறை அமைச்சராக இருந்தவர் திரு. மல்லாடி கிருஷ்ணராவ் என்பதை மறந்து, முன்னாள் முதல்வர் மீது பழி போடுவது மக்களிடம் எடுபடாது.

சபாநாயகர் செல்வம் அவர்கள் ஒவ்வொரு நாளும் ஒரு பொய்க் கதையைக் கூறி வருகிறார். 100 கோடி கடன் வாங்கித் தர ராஜா என்பவரை நிதியமைச்சரிடம் அறிமுகம் செய்து வைத்த சபாநாயகர், இன்று அவரைத் தெரியாது என நாடகமாடுகிறார். இந்த ஊழலில் கைமாறிய 20 சொகுசு கார்கள் யார் யாருக்குச் சென்றது என்பதை அரசு ஏன் இன்னும் விளக்கவில்லை?

"நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மத்திய அரசு 70% நிதி தரும், மாநில அரசு 30% தரும்" என்று கூறிவிட்டு இன்று வரை அதை நிறைவேற்றவில்லை. ஸ்மார்ட் சிட்டி, 4 வழி சாலை, மேம்பாலங்கள், 10,000 முதியோர் உதவித்தொகை, SC/ST மாணவர் கல்வி நிதி என காங்கிரஸ் ஆட்சியில் கொண்டு வந்த திட்டங்களை அன்றைய ஆளுநர் கிரண்பேடியை வைத்து முடக்கிவிட்டு, இன்று அவற்றைத் தாங்கள் செய்ததாகக் கூறி 'ஸ்டிக்கர்' ஒட்டி ஊழல் மலிந்த ஆட்சியை நடத்துகிறார்கள். பிஜேபியின் இந்த 'ஒஸ்ட் புதுச்சேரி' மாடல் மது மற்றும் போதைப் பொருளுக்கே முக்கியத்துவம் அளிக்கிறது.

அனைத்துத் துறைகளிலும் 30% கமிஷன் வாங்கும் அரசாக இது மாறியுள்ளது. கோயில் நில மோசடி, பத்திரப்பதிவு ஊழல், பொதுப்பணித்துறை ஊழல் எனப் பட்டியல் நீள்கிறது. போலி மருந்து விவகாரத்தில் உயிருக்கு அஞ்சி மக்கள் பிபி, சுகர் மருந்துகளைச் சாப்பிடவே பயப்படுகிறார்கள்.

இதற்கு இந்த அரசு என்ன பதில் சொல்லப்போகிறது?

திருப்பரங்குன்றம் விவகாரம் மற்றும் லெனின் சிலையுடன் விநாயகர் சிலையை ஒப்பிடுவது போன்ற தரம் தாழ்ந்த அரசியலைச் செய்து, போலி மருந்து ஊழலை மறைக்கப் பார்க்கிறது இந்த அரசு. ஆனால், நியாயமான விசாரணை கோரி ஆளுநரிடம் சிபிஐ விசாரணைக்கு நாங்கள் ஒப்புதல் பெற்றுள்ளோம்.

முன்னாள் முதல்வர் திரு. நாராயணசாமி அவர்கள் மீது அவதூறு பரப்புவதை இத்துடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். ஊழலில் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்காவிட்டால், மக்கள் திரண்டு புரட்சி செய்து இந்த அரசைத் துரத்தும் காலம் வெகுதூரத்தில் இல்லை. எங்களிடம் அனைத்து ஊழல்களுக்கும் ஆதாரங்கள் உள்ளன என்பதை நினைவில் கொள்க.

# விழுப்புரம் மாவட்டத்தில் கட்டப்பஞ்சாயத்து ரவுடியிசம் முற்றிலும் ஒழிக்கப்படும்.

## புதியதாக பொறுப்பேற்ற எஸ்பி சாய் பிரனீத் அதிரடி

விழுப்புரம் ஜன:5

விழுப்புரம்மாவட்டத்தில் கட்டப்பஞ்சாயத்து ரவுடியிசம் முற்றிலும் ஒழிக்கப்படும்என்றுபுதியதாக பொறுப்பேற்ற எஸ் பி சாய் பிரனீத் கூறினார்

விழுப்புரம் எஸ் பி யாக இருந்தசரவணன் டிஐஜியாக பதவி உயர்வு பெற்று இடம் மாற்றம் செய்யப்பட்டார் அவருக்கு பதிலாக சாய் பிரனீத்நியமிக்கப் பட்டார் புதியதாக நியமிக்கப்பட்ட எஸ்பி சாய் பிரனீத் பொறுப்பேற்றுக் கொண்டார் 2018 ஆம் ஆண்டு ஐபிஎஸ் பணியில் சேர்ந்த அவர் செங்கல்பட்டு எஸ் பி மதுரை மாநகர துணை ஆணையர் பொருளாதார குற்றப்பிரிவு எஸ்பியாகபணியாற்றியுள்ளார்

விழுப்புரத்தில் பொறுப்பேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது

விழுப்புரம் மாவட்டத்தில் கஞ்சா தடை செய்யப்பட்ட குட்கா உள்ளிட்ட போதைப் பொருட்களுக்குஎதிராககடும் நடவடிக்கை எடுக்கப்படும் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ளிட்ட முக்கிய சாலைகளில் விபத்துக்களை குறைக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கப்படும் அதேபோல் விழுப்புரம் மாவட்டத்தில் எந்த விதமான ரவுடித் தனங்கள் கட்டப்பஞ்சாயத்து போன்ற செயல்கள் நடந்தால் அதனை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்படும் வரவுள்ள சட்டமன்றத் தேர்தலை ஒட்டி சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு பணிகள் முறையாகமேற்கொள்ளப்படும் குற்றங்களை உடனுக் குடன் கண்டறிதல் மற்றும் வழக்குகளைசரியானநேரத்தில் விசாரிக்க காவல் நிலையங்களுக்கு உத்தரவு பெற்றுள்ளது அதேபோல் காவல்துறையினர் நலனிலும் அக்கறைகொண்டு அவரவர்களுக்கான பணிகள் செயல்படுத்தப்படும் பொதுமக்களிடம் காவல்துறையினர் மனிதாபிமான நடத்தையை மேம்படுத்துவது மற்றும் பொதுமக்களின் குறைகளுக்கு சரியான நேரத்தில் தீர்வு காணவும் நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாறு அவர் கூறினார் புதியதாக பொறுப்பேற்ற எஸ்பி சாய் பிரனீத்தை . கூடுதல் எஸ்பி தினகரன் இளங்கோவன் மற்றும் டி எஸ் பி க்கள் இன்ஸ்பெக்டர்கள் உள்ளிட்டோர் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

# மேட்டுப்பாளையம் அருகே அருள்மிகு ஸ்ரீ வன பத்திரகாளியம்மன் கோவிலில் ரூ 6.86 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சி பணிகளை திறப்பு விழா!!




கோவை ஜன:05

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், காரமடை ஒன்றியம் தேக்கம்பட்டி பகுதியில் உள்ள பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ வனபத்ரகாளியம்மன் திருக்கோவிலில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் திருப்பணிகளான ஆற்றங்கரை விநாயகர் திருக் கோவிலுக்கு செல்லும் நடைபாதை மண்டபம் ரூ. 3.29 கோடி, முடி காணிக்கை மண்டபம் மற்றும் பெண்கள் உடைமாற்றும் அறை ரூ. 1.55 கோடி, கோவில் சுற்றுச்சுவர் ரூ. 2.02 கோடி, ஆக மொத்தம் ரூபாய் 6.86 கோடி மதிப்பீட்டில் கட்டுமான பணிகள் செய்யப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது. இவ்விழாவில் இணை ஆணையர் ரமேஷ்,செயல் அலுவலர் கைலாச மூர்த்தி, மேட்டுப் பாளையம் காவல் துணை கண்காணிப் பாளர் பாஸ்கர், காவல் ஆய்வாளர் சின்ன காமணன், கோவை மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் கவிதா கல்யாணசுந்தரம், திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம், காரமடை ஒன்றிய பொறுப்பாளர்கள் மேற்கு சு.சுரேந்திரன், வடக்கு எஸ்.எம்.டி. கல்யாணசுந்தரம், கிழக்கு காந்தி,மேட்டுப் பாளையம் நகர செயலாளர் முனுசாமி, காரமடை நகர பொறுப்பாளர் குருபிரசாத், பொதுக்குழு உறுப்பினர் பிரஸ்குமார், மாவட்ட பிரதிநிதி மேடூர் கணேசன், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் திலீப் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

# சேலத்தில் 'என் வாக்குச்சாவடி,வெற்றி வாக்குச்சாவடி' பிரசார வாகனம் : அமைச்சர் ராஜேந்திரன் தொடங்கி வைத்தார்.




சேலம். ஜன.5–

சேலம் வடக்கு சட்டப் பேரவைத் தொகுதிக்கு உள்பட்ட கன்னங்குறிச்சி பகுதியில்' என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி'பிரசார வாகனத்தை சுற்றுலாத் துறை அமைச்சர்ரா.ராஜேந்திரன் தொடங்கிவைத்தார்.

வரம் சட்டப்பேரவைத் தேர்தலை கருத்தில் கொண்டு, தமிழக முழுவதும் திமுக அரசின் சாதனையை பொதுமக்களிடம் எடுத்துச் செல்லும் வகையில், 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' பிரசாரத்தை முதல்வர்மு.க. ஸ்டாலின் அண்மையில் முன்னெடுத்தார்.

அதன் ஒரு பகுதியாக, சேலம் மத்திய மாவட்ட திமுக சார்பில் வடக்கு சட்டப்பேரவைத் தொகுதிக்கு உள்பட்ட கன்னங் குறிச்சி பகுதியில் 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' பிரசார வாகனத்தை அமைச்சர் ராஜேந்திரன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த வாகனத்தில் இடம்பெற்றுள்ள எல்.இடி. திரையில்,திமுக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்து ஒலி ஒளி வடிவில் எடுத்துரைக்கப்படுகிறது. இந்நிகழ்ச்சியில், சேலம் மாநகர திமுக செயலாளர்ரகுபதி, வடக்கு தொகுதி பொறுப்பாளர் விவேக், கன்னங்குறிச்சி பேரூர் செயலாளர் தமிழரசன் உள்ளிட்ட நிர்வாகிகள் அளவில் கலந்து கொண்டனர்.

# அதிமுக சார்பில் இலவச கண் சிகிச்சை முகாம். வாக்காளர்கள் சீர்திருத்தமுகாமை ஆய்வு செய்தார்!!



ஜனவரி =5

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக திருப்பூர் மாநகர் மாவட்டம் வடக்கு சட்டமன்ற தொகுதி கோல்டன் நகர் பகுதி கழகத்திற்கு

உட்பட்ட 33வது வட்டக் கழகம் சார்பில் சத்யா காலனி சமுதாய கூடத்தில் மாமன்ற உறுப்பினர் திருமதி தமிழ்ச்செல்வி முத்துக்கிருஷ்ணன் அவர்களது ஏற்பாட்டில் எம். வி .கண் மருத்துவமனை திருப்பூர் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் இணைந்து நடத்திய மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் கே.என் விஜயகுமார் கலந்துகொண்டு முகாமினை துவக்கி வைத்தார். உடன் பகுதி செயலாளர் ஹரிஹரசுதன்.33 வது வட்டக் கழக செயலாளர் மாணிக்கம்.வட்டக் கழகத் துணைச் செயலாளர்கள் விஸ்வநாதன். பகுதி அம்மா பேரவை செயலாளர் தனபால். மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர். பின்பு அருகில் உள்ள பள்ளியில் வாக்காளர் சீர்திருத்த முகாமினை சட்டமன்ற உறுப்பினர் ஆய்வு செய்தார் மேலும் கழக நிர்வாகி அசோக். இருசக்கர வாகனத்தில் வாகனம் முழுவதும் அதிமுகவின் வண்ணக் கலர்கள் ஸ்டிக்கர் மற்றும் முகப்பு பகுதியில் இரட்டை இலை பதித்த கழகக் கொடியினை கண்ட சட்டமன்ற உறுப்பினர் அவருக்கு வாழ்த்துக்களை தெரிவித்து பொன்னாடை போற்றி மகிழ்ந்தார்....

# தமிழக வெற்றி கழகம் தெற்கு மாவட்ட சார்பில் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் 267 வது ஜெயந்தி விழா!!



கோவை ஜன:05

முதல் சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் 267 வது ஜெயந்தி விழா தமிழகம் முழுவதும் அனைத்து கட்சி தலைவர்களும் கொண்டாடி வரு கின்றனர். இந்நிலையில், கோவை ஈச்சனாரி பகுதியில் அமைந்துள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் திருவுருவ சிலைக்கு தமிழக வெற்றி கழகத்தின் சார்பாக கோவை தெற்கு மாவட்ட செயலாளர் விக்னேஷ் தலைமையில் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. உடன் தமிழக வெற்றிக்கழக தெற்கு மாவட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், தளபதி அவர்களின் வழிகாட்டுதலின்படி வீரபாண்டி கட்டபொம்மன் மற்றும் வீர பெண்மணி வேலு நாச்சியார் அவர்களின் பிறந்தநாளை போற்றும் விதமாக அன்னதானம் மற்றும் அவர்களின் திருவுருவட்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப் பட்டது. மேலும் வரும் மார்ச் மாதம் கோவையில் தளபதி அவர்களின் பொதுகூட்டம் நடைபெரும் என தெரிவித்தார்.

# திருச்சி மன்னார்புரத்தில் பிஜேபி கட்சி சார்பில் அமைக்கப்படும் பிரம்மாண்டமான மேடை :



திருச்சியில் இன்று 5ந்தேதி மன்னார்புரம் ராணுவ மைதானத்தில் மோடி பொங்கல் விழா நடைபெறுகிறது. இந்த விழாவில் மத்திய மந்திரி அமித்ஷா கலந்துகொண்டு தொடங்கி வைக்கிறார் .இந்த விழாவிற்காக பிரம்மாண்டமான மேடை அமைக்கும் பணியை பாஜக மாநில இணை செயலாளர் சிவசுப்பிரமணியம், திருச்சி மாநகர் மாவட்ட பாஜக தலைவர் ஒண்டிமுத்து உள்ளிட்ட நிர்வாகிகள் பார்வையிட்ட போது எடுத்த படம்.

## புதிய நியாய விலை கடை கட்டிடம் திறப்பு விழா: எம்பி,எம்எல்ஏ பங்கேற்பு



திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தெள்ளூர் கிராமத்தில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, புதிய நியாய விலை கடை கட்டிடம் கட்டப்பட்டது. அந்த கட்டிடத்தின் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இதில் ஆரணி எம்பி எம்.எஸ்.தரணிவேந்தன், வந்தவாசி எம்எல்ஏ எஸ்.அம்பேத்குமார் ஆகியோர் பங்கேற்று புதிய கடையை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர். மேலும் பொதுமக்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கி சிறப்புரை ஆற்றினர். மேலும் இந்த நிகழ்ச்சியில் பிடிஓ ஏ.பி.வெங்கடேசன், ஒன்றிய செயலாளர் ஆரியாத்தூர் பெருமாள், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் கோபு சுமதி, திமுக பொறுப்பாளர்கள் மதன் குமார், கிஷோர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## காங்கேயம் ஊராட்சி பகுதியில் ரூ.10.42 கோடி மதிப்பில் வளர்ச்சி திட்ட பணிகள் அமைச்சர் தொடங்கி வைத்தார்



திருப்பூர், ஜன. 05:

திருப்பூர் மாவட்டம். காங்கேயம் ஊராட்சி ஒன்றியம் பாப்பினி ஊராட்சி, பச்சா பாளையத்தில் ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் தாட்கோ மூலம் ரூ.80.23 லட்சம் மதிப்பீட்டில் அறிவுசார் மையம் அமைக்கும் பணி மற்றும் முள்ளிபுரம், அரசுக் கலைக்கல்லூரி வளாகத்தில் உள்ள சீமை கருவேலம்மரங்கள் அகற்றும் பணி,

காங்கேயம் நகராட்சி, வாரச்சந்தை வளாகத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.9.62 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தினசரி சந்தை கடைகள் மற்றும் வாரச்சந்தை கடைகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்.

ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் பிரகாஷ் முன்னிலை வகித்தார்.

இதில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேசியதாவது:

காங்கேயம் வாரச்சந்தை வளாகத்தில் தினசரி சந்தை கடைகள் மற்றும் வாரச்சந்தை கடைகளை திறந்து வைக்கப்பட்டுள்ளது. காங்கயம் நகராட்சி 22:198 ச.கி.மீட்டர் பரப்பளவில் 43,182 மக்கள் தொகையை கொண்டுள்ளது. இந்த நகராட்சியில் திங்கள் கிழமை வாரச்சந்தை நடைபெற்று வருகிறது.

இதனை மேம்படுத்தும் வகையில் காங்கயம் நகராட்சி தினசரி மற்றும் வாரச்சந்தை வளாகத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.9.62 கோடி மதிப்பீட்டில் தினசரி மார்கெட்டில் 10ஜ16 அடி அளவுள்ள 47 கடைகள்.

10ஜ16 அடி அளவுள்ள 8 இறைச்சிகள், 10 ஜ் 20 அடி அளவுள்ள 1 உணவக கடை மற்றும் வாரச்சந்தையில் 10ஜ10 அடி அளவுள்ள 294 தரைதள கடைகள் மற்றும் ஆண்கள், பெண்கள் கழிப்பிடம் போன்ற அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மேலும் காங்கேயம் நகராட்சிக்கு புதிய அலுவலகம் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. காங்கேயம் நகராட்சிக்கு கூடுதலாக 9 குடிநீர் தொட்டி கள் அமைக்கப்பட்டுள்ளது. ரூ.36.00 கோடி மதிப்பீட்டில் அம்ரூத் திட்டத்தின் கீழ் குடிநீர் குழாய் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச் சருக்கும், துணை முதலமைச் சருக்கும் எனது சார்பிலும், காங்கேயம் தொகுதி மக்கள் சார்பிலும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், மண்டல இயக்குநர் (நகராட்சி நிர்வாகம்) ராஜாராம், செயற்பொறியாளர் (தாட்கோ) அருண்குமார், காங் கேயம் நகர்மன்றத்தலைவர் சூரியபிரகாஷ், காங்கேயம் நகராட்சி ஆணையாளர் பால்ராஜ், நகராட்சி பொறியாளர் குணசீலன், காங்கேயம் வட்டாட்சியர் தங்கவேல் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கல்லூரி முதல்வர், மாணவர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திருச்சி அருகே 2 வது நாளாக வைகோ நடைப்ப பயணத்தை தொடங்கினார்

### மும்மத பிரதிநிதிகள் வரவேற்பு அளித்தனர்.

திருச்சி, ஜன. 5

திருச்சியில் , போதைப் பொருள் ஒழிப்பு சாதி, மத மோதல் தடுப்பு உள்ளவற்றை வலியுறுத்தி மதிமுக பொதுச்செயலாளர் வைகோ சமத்துவ நடை பயணத்தை மேற்கொள்கிறார். திருச்சியில் தொடங்கி வருகிற 12ந்தேதி மதுரையில் முடிக்கிறார்.இதன் தொடக்க விழா நேற்று திருச்சி தென்னூர் உழவர் சந்தையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு க ஸ்டாலின் கலந்து கொண்டு நடை பயணத்தை தொடங்கி வைத்து பேசினார். நிகழ்ச்சியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி தலைவர்கள் கலந்து கொண்டனர்.



இன்று 2வது நாள் சமத்துவ நடைபயணம் நடைபெற்றது

திருச்சி தெற்கு மாவட்ட மதிமுகவின் எல்லையான மணிகண்டம் ஒன்றியப் பகுதி பஞ் சப்பூர் கன்வென்சன் சென்டர் அருகில் உள்ள செங்குறிச்சி பிரிவு சாலை சந்திப்பில் காலை 7 மணிக்கு அதிமுக பொதுச்செயலாளர் வைகோ நடைப்பயணத்தை தொடங்கினார். அப்பொழுது மதிமுக சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த முதல் இடத்தில் சிவனடியார்கள் திருமுறைகள் பாடி , பூரண கும்ப மரியாதையுடன், நாகசுர வாத்திய இசையுடனும், சைவ நெறிப்படியும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நாகமங்கலத்தில் 11.30 மணிக்கு இஸ்லாமிய சான்றோர்கள் பங்கேற்று திருக்குர் ஆன் ஓதி வரவேற்றனர்.

இந்த இரண்டாம் நாள் நடைபெற நிகழ்ச்சியில்மதிமுக முதன்மை செயலாளர் துரை வைகோ எம்பி, மாநில துணைப் பொதுச் செயலாளர் டாக்டர் ரொகையா, மாவட்ட செயலாளர்கள் வெல்லமண்டி சண்முகம், மணவை தமிழ்மாணிக்கம் டி டி சி சேரன் வெளியிட்டுப் பிரிவு மாநில துணை செயலாளர் நடுவை முருகன், பகுதி செயலாளர்கள் ஆசிரியர் முருகன், ஆர் கே ஆர் வினோத், ஜங்ஷன் செல்லதுரை உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் சென்றனர். பிறகு அங்கு ஓய்வு எடுக்கிறார்

இதைத்தொடர்ந்து மாலை 6 மணிக்கு பாத்திமாநகர் தேவாலயம் முன்பு கிறித்தவ நெறிப்படி, பங்குத் தந்தை தலைமையில் விவிலியம் படித்து ,தோத்திரம் சொல்லி அப்பகுதி மக்கள் வரவேற்கின்றனர்.இதற்காக மூன்று சமயக் கோவில்களின் படம் வைக்கப்பட்டுள்ள பிரத்யோகமான மேடை அமைக்கப்பட்டுள்ளது.

## கிராமப்புறங்களில் உயர்தர இணைய சேவைகளை வழங்கும் நோக்கில் மாவட்ட அளவிலான தொழில் பங்கீட்டாளர் பணிக்கு விண்ணப்பிக்கலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தகவல்.

கள்ளக்குறிச்சி ஜன 5

தமிழ்நாடு அரசு நிறுவன மான தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET) பாரத்நெட் திட்டத்தின் கீழ் கிராமப்புறங் களில் உயர்தர இணைய சேவை களை வழங்கும் நோக்கில் மாவட்ட அளவிலான தொழில் பங்கீட்டாளர்களை (DLFP) தேர்வு செய்யும் பணிகளை தொடங்கியுள்ளது. மாநிலத்தில் பாரத்நெட் பணிகள் சுமார் 95% வரை நிறைவடைந்துள்ளன. தமிழ்நாட்டின் 37 மாவட்டங் களிலும், ஒவ்வொரு மாவட்டத் திலும் குறைந்தது இரண்டு தொழில் பங்கீட்டாளர்களை தேர்வு செய்து, தடையில்லா இணைய சேவைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. இதன்படி, ஒவ்வொரு மாவட்டமும் வருவாய் உட்கோட்டம் (Revenue Division) அடிப்படையில் 2 முதல் 6 வட்டாரங்களை கொண்ட துணைப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, தொழில்



பங்கீட்டாளர்கள் தேர்வு செய்யப்படுவர்.


விண்ணப்பதாரர் அதிகபட்சம் இரண்டு மாவட் டங்களுக்கு விண்ணப்பிக்க அனுமதிக்கப்படுவார். அந்த மாவட்டங்கள், நிறுவனம்/ நிறுவனத்தின் வணிகச் செயல்பாட்டுப் பகுதி அமைந்துள்ள மாவட்டம் மற்றும்/அல்லது தனிப்பட்ட விண்ணப்பதாரரின் முகவரி அமைந்துள்ள மாவட்டமாக இருக்க வேண்டும். தேர்வு செய்யப்படும் தொழில் பங்கீட்டாளர்களின் முக்கிய பொறுப்புகளில், Optical Fibre Cable (OFC) மற்றும் Optical Network Terminal (ONT) பராமரிப்பு, தடையில்லா இணைய சேவை வழங்குதல், ளிதிசி பராமரிப்பு பணிகள், சேவை தடைகளை காலதாமதமின்றி சரிசெய்தல், Service Level Agreement (SLA) விதிமுறைகளை பின்பற்றுதல் மற்றும் சேவை கிடைப்புத் தரத்தை பராமரித்தல் ஆகியவை அடங்கும்.

விண்ணப்ப பதிவு நடைமுறை TANFINET இணையதள போர்டல் https://tanfinet.tn.gov.in/ மூலம் நடைபெறும். விண்ணப்ப தாரர்கள் அறிவிப்பு மற்றும் தொடர்புடைய ஆவணங் களைப் பதிவிறக்கம் செய்து, தேவையான ஆவணங்களை

பதிவேற்றம் செய்து, தாங்கள் செயல்பட விரும்பும் துணைப் பிரிவுமி (Division) தேர்வு செய்ய வேண்டும். ஒவ்வொரு துணைப் பிரிவுக்கும் ரூ.25,000/ (திரும்பப்பெறக்கூடிய, வட்டியில்லா) விண்ணப்ப பாதுகாப்பு வைப்பு தொகை செலுத்த வேண்டும்.

தேர்வு செய்யப்படும் பங்கீட்டாளர்கள், ஒவ்வொரு வட்டாரங்களுக்கும் ரூ.2,00,000/ பாதுகாப்பு வைப்பு தொகை செலுத்திய பின்னர், TANFINET தலைமையகத்தால் பணி ஆணை (Work Order) வழங்கப்படும். இந்த நோக்கத் திற்கான TANFINET விண்ணப்ப இனைய தள இனைப்பு https://tanfinet.tn.gov.in/ 01.01.2026 முதல் 14.01.2026 வரை செயல்படும். ஆர்வமுள்ள விண்ணப்ப தாரர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும், விவரங்களுக்கு 044 2496 5595 என்ற உதவி மைய எண்ணை தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ். பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

## பாரம்பரிய முறைப்படி ஏழு வம்சாவழி பூசாரிகளும் ஒன்றிணைந்து ஆருத்ரா லிங்க பூஜையும் அங்காளம்மன் வழிபாடும் செய்து கூட்டு பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.



விழுப்புரம், ஜன.5–

விழுப்புரம் மாவட்டம் பிரசித்தி பெற்ற மேல்மலையனூர் அங்காளம்மன் கோவிலில் மார்கழி மாத சிறப்பு ஆருத்ரா நாளான லிங்கதாரர்களால் லிங்க பூஜை செய்யப்பட்டது.

அதாவது கழுத்தில் லிங்கம் அணிந்து அங்காளம்மனுக்கு பூஜை செய்பவர்களே லிங்கதாரர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

அவ்வாறு லிங்கம் அணிந்து பூஜை செய்யும் லிங்கதாரர்கள் மார்கழி மாத சிறப்பு ஆருத்ரா நாளான நேற்று சன்னு முனிவர் ஜீவசமாதி யின் மேல் லிங்கம் அமைத்து பூஜை செய்தனர்.

லிங்கபூஜைக்காக ரோஜா, செவ்வந்தி, மல்லி, சங்கு புஷ்பம், சென்பக மலர் உட்பட 27 வகையான மலர்கள் 501 கிலோ கொண்டு லிங்க பூஜை சிறப்பாக நடைபெற்றது.

இதில் லிங்கதாரர்கள் சிறப்பு அலங்காரத்தில் வீற்றிருந்த உற்சவர் அங்காளம்மனை முன் நிறுத்தி சன்னு முனிவர் ஜீவசமாதியின் மேல் லிங்கம் அமைத்து லிங்கதாரர்கள் தங்கள் அணிந்திருந்த லிங்கத்திற்கு அபிஷேகமும் ஆராதனையும் செய்து அதன் பின் லிங்க பாடல்கள் பாடி பூஜை செய்தனர்.

இவ்வாறு லிங்க பூஜை செய்வதால் மனதில் உள்ள தீய எண்ணங்கள் அழிந்து தூய மனதுடன் அங்காளம்மனை பூஜை செய்யலாம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

பாரம்பரிய முறைப்படி ஏழு வம்சாவழி பூசாரி களும் ஒன்றிணைந்து ஆருத்ரா லிங்க பூஜையும் அங்காளம்மன் வழிபாடும் செய்து கூட்டு பிரார்த் தனையில் ஈடுபட்டனர்.

விழா ஏற்பட்டினை அறங்காவல் குழு தலைவர் ஏழுமலை , அறங்காவலர்கள் மற்றும் பூசாரிகள் செய்திருந்தனர்

## திருச்சியில் பரிதாபம் : பூச்சி மருந்து சாப்பிட்டு தனியார் நிறுவன ஊழியர் சாவு ,போலீசார் விசாரணை

திருச்சி ஜன. 5

திருச்சி , வரகனேரி, வடக்கு பிள்ளையார் கோவில் பகுதியைச் சேர்ந்தவர் சுந்தரராஜன் (55)., தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். இவர் கடந்த சில மாதங்களாக தீராத வயிற்று வலியால் அவதிப்பட்டு வந்தார் இதனால் தன் வீட்டில் பூச்சி மருந்து சாப்பிட்டு தற்கொலைக்கு முயன்றார் அவரை அருகில் இருந்தவர்கள் மீட்டு திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். அங்கு சிகிச்சை பெற்று வந்த சுந்தரராஜன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் இதுகுறித்து காந்தி மார்க்கெட் போலீசார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

## திருச்சி மாவட்டம் துவரங்குறிச்சி அருகே “நீதிகதிர் எக்ஸ்பிரஸ் காலை நாளிதழ்“ செய்தி எதிரொலியாக மருங்காபுரி வட்டார பொதுமக்கள் நன்றி தெரிவித்து வருகின்றனர்:

திருச்சி. ஜன.5

திருச்சி மாவட்டம் , துவரங்குறிச்சி அருகே மருங்காபுரியில் தெரு நாய்களின் அட்டூழியம் தாங்க முடியாமல் நூற்றுக்கணக்கான வளர்ப்பு ஆடுகள் பலியானதை அடுத்து கிராம நிர்வாக நடவடிக்கை எடுக்காமல் இருந்ததை கண்டித்து நமது நீதிகதிர் நாளிதழுக்கு கொடுத்த தகவலின் பேரில் செய்தியாக வெளியிடப்பட்டது , இச்செய்தியின் எதிரொலியாக கிராம பஞ்சாயத்து நிர்வாகத்தின் சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் மூலம் அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி அடைந்தவுடன் நமது நாளிதழுக்கு நன்றி தெரிவித்து வருகின்றனர்.

## திருச்சி மேற்கு தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட வேட்பாளர் விருப்ப மனு



திருச்சி ,மேற்கு தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட முன்னாள் சிறுபான்மை பிரிவு மாநிலத் துணைத் தலைவர் கருமண்டபம் கே .டி .அன்பு ரோஸ் சென்னை அதிமுக தலைமை அலுவலகத்தில் நிர்வாகிகளிடம் விருப்ப மனு அளித்த போது , அருகில் மாநகர மாவட்ட விவசாய அணி துணைச் செயலாளர் ராஜேந்திரன், ஜங்ஷன் பகுதி எம்ஜிஆர் இளைஞர் அணி துணை செயலாளர் கே. டி . ஏ ஆனந்தராஜ் மற்றும் கட்சி நிர்வாகிகள் மற்றும் முக்கிய பிரதிநிதிகள், உறுப்பினர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

## திருவையாறு தியாகராஜர் 179வது ஆராதனை விழா: ஐகோர்ட் நீதிபதி துவக்கி வைத்தார்

தஞ்சாவூர்: ஜன.5–

தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறில் தியாக பிரம்ம மகோற்சவ சபா சார்பில் சத்குரு ஸ்ரீ தியாகராஜர் 179வது ஆராதனை விழா (3ம்தேதி) மாலை தொடங்கியது. சபா தலைவர் ஜி.கே.வாசன் தலைமை வகித்தார். கலெக்டர் பிரியங்கா பங்கஜம் முன்னிலை வகித்தார். சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி சுரேஷ்குமார், குத்துவிளக்கேற்றி விழாவை தொடங்கி வைத்து பேசுகையில், இந்த ஆராதனை விழா என்பது இந்திய எல்லை கோடுகளை எல்லாம் தாண்டி உலகம் முழுவதிலும் சிறந்த இசைவிழாவாக உருவெடுத்திருக்கிறது.

நான் அறிந்தவரை இந்தியாவிலே எந்த ஒரு இசை நிகழ்விற்கும் 5 குடியரசுத் தலைவர்கள் பங்கு பெற்றதாக சரித்திரம் இருக்கிறதா என்று தெரியவில்லை. 2400 கீர்த்தனைகள் படைத்த ஒரே மகான் இருக்கிறார் என்று சொன்னால் அது தியாகராஜ சுவாமிகள் மாத்திரம் தான். எனவே தான் சங்கீத மும்மூர்த்திகள் என்பவர்கள் மூவராக இருந்தாலும் கூட அவர்களில் தல நாயகராக தியாகராஜ சுவாமி கருதப்படுகிறார். எனவே அவருக்கு ஆராதனை செய்வதன் மூலமாக நாம் இறைவனை தொழுகிறோம். இவ்வாறு அவர் பேசினார்.

# கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் ஒன்றியத்தை பிரித்து வாணாபுரம் ஒன்றியம் உருவாக்கி அரசாணை வெளியீடு

கள்ளக்குறிச்சி ஜன 05

கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் ஒன்றியத்தை பிரித்து வாணாபுரம் ஒன்றியம் உருவாக்கி அரசாணை வெளியிட்டுள்ளது தமிழ்நாடு அரசு வாணாபுரம் ஒன்றியத்தை உருவாக்கி முதற்கட்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளது தமிழ்நாடு அரசு.

ஆறு வாரத்துக்குள் ஆட்சேபனை மற்றும் கருத்துகளை பொதுமக்கள் தெரிவிக்கலாம். 22 ஊராட்சிகள் ரிஷிவந்தியத்திலும், 38 ஊராட்சிகள் வாணாபுரம் ஒன்றியத்திலும் இணைக்கப் பட்டுள்ளன

ஊரக உள்ளாட்சி அமைப்புகளை மறுசீரமைப்பு செய்வது தொடர்பாக அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்கள் தலைமையில் மாநில அளவிலான உயர்மட்டக்குழு (High Level Committee) அமைக்கப்பட்டது. அதனடிப் படையில் பல்வேறு தேதிகளில் கூடி இப்பொருண்மைகள் மீது விரிவான ஆலோசனைகள், விவாதங்கள் மேற்கொள்ளப் பட்டது.

மேலும், ஊரக உள்ளாட்சி அமைப்புகளை மறுசீரமைப்பு செய்தல் தொடர்பாக அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலி காட்சிமூலமாகஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன. அதனைத் தொடர்ந்து ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மறுசீரமைப்பு தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் களிடம் உரிய கருத்துருக்கள் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

"கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து ரிஷிவந்தியம் மற்றும் வாணாபுரம் ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக்கப்படும். மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டுவதாக படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதத்தில் கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்தை பல்வேறு காரணிகளின் அடிப்படையில் ரிஷிவந்தியம் மற்றும் வாணாபுரம் என இரு ஊராட்சி ஒன்றியங்களாக பிரித்து 'மறுசீரமைப்பு' செய்வது தொடர்பாக மேலே 3வதாக படிக்கப்பட்ட கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின் அடிப்படையில் கீழ்கண்டவாறு கருத்துரு அனுப்பியுள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்தில் 60 கிராம ஊராட்சிகளில் 160 குக்கிராமங்கள் உள்ளன. இதன் பரப்பளவு 342.99 ச.கி.மீ ஆகும். மேலும் மொத்த மக்கள் தொகை 1,65,429 (2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி) ஆக உள்ளது. கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பின்தங்கிய ஒன்றியமான ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்தின் வட்டார வளர்ச்சி அலுவலகம் வாணாபுரம் கிராம ஊராட்சியில் அமைந்துள்ளது.

எனவே, வாணாபுரத்தினை தலைமையிடமாக கொண்டு ஒரு ஊராட்சி ஒன்றியம் மற்றும் ரிஷிவந்தியத்தினை தலைமையிடமாக கொண்டு ஒரு ஊராட்சி ஒன்றியம் என்று இரண்டு ஊராட்சி ஒன்றியங்களாக பிரிக்க வேண்டும் என்பது அப்பகுதி தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களின் நீண்டகால கோரிக்கை ஆகும். எனவே, 38 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி வாணாபுரம் கிராம ஊராட்சியை தலைமை இடமாகக் கொண்டு ஒரு புதிய ஊராட்சி ஒன்றியத்தை உருவாக்கிட கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்துள்ளார்.

* ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்தினை இரண்டாக பிரிப்பதால் ஏற்படும் நன்மைகள்:

புதியதாக ஊராட்சி ஒன்றியத்தினை உருவாக்கினால் விவசாயிகள் தங்கள் பொருட்களை சந்தைப்படுத்தவும் தேவையான பொருட்களை கொள்முதல் செய்வதற்கும் ஏதுவாக இருக்கும். ரிஷிவந்தியத்தினை தலைமையிடமாக கொண்டு ஊராட்சி ஒன்றியத்தினை உருவாக்கும் பட்சத்தில் அப்பகுதி மக்களின் பயண நேரம் 30 நிமிடங்களாக குறையும்.

இதனால் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், நிர்வாகம் செய்வதற்கும். புள்ளி விவரங்கள் பெறுவதற்கும் ஏதுவாக திறம்பட செயலாற்ற இயலும். அதனால் வளர்ச்சி வேகம் அதிகரிக்கும் என்றும் பின்தங்கிய பகுதியில் வாழும் மக்களுக்கு அரசு நலத்திட்டங்கள் எளிதில் சென்று சேரும். மேலும், வாழ்வாதாரம் மேம்படும். எனவே, மேற்படி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாக பிரித்து மறுசீரமைப்பு செய்யவேண்டியது அவசியமாக உள்ளது என கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்துள்ளார்

கள்ளக்குறிச்சி மாவட்டத்திலுள்ள ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து 22 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியமாக செயல்படவும் மற்றும் 38 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி வாணாபுரம் ஊராட்சி ஒன்றியம் என்ற புதிய ஊராட்சி ஒன்றியம் உருவாக்கவும் கோரிய கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின் அடிப்படையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் பரிந்துரை செய்து கருத்துருவினை அரசுக்கு அனுப்பி உரிய ஆணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்காண் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்க முடிவு செய்து, கள்ளக்குறிச்சி மாவட்டத்திலுள்ள ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து பிற்சேர்க்கை 1ல் உள்ளவாறு 22 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியமாகவும் மற்றும் 38 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி வாணாபுரம் ஊராட்சி ஒன்றியம் என்ற ஒரு புதிய ஊராட்சி ஒன்றியத்தை உருவாக்கியும் அரசு ஆணையிடுகிறது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஊரக உள்ளாட்சி பதவிக்காலம் முடிவுற்ற பின்னர் இந்த பதவிகளுக்கான அரசாணை நடைமுறைப்படுத்தப்படும்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சித்தபட்டினம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வாக்குச்சாவடி மையத்தில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 சிறப்பு முகாமினை மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான எம்.எஸ்.பிரசாந்த் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

## துவரங்குறிச்சி பகுதியில் மின் நிறுத்தம்:

திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சி சுற்றியுள்ள பகுதிகளில் 110/11 கி வோ துணை மின் நிலையத்தில் 06.01 .2026 செவ்வாய்கிழமை மாதாந்திர பணிகள் நடைபெற உள்ளதால் 9.45 மணி முதல் மாலை 4.00 மணி வரை மின் விநியோகம் பெறப்படும் பகுதிகளான துவரங்குறிச்சி, அழகாபுரி , அக்கியம்பட்டி , அதிகாரம், நாட்டார் பட்டி, சடவேலாம்பட்டி, உசிலம்பட்டி , ஆலம்பட்டி , இக்கரைகோசிகுறிச்சி, செவந்தாம்பட்டி, தெத்தூர், செவல்பட்டி, பிடாரபட்டி, வெங்கட்நாயக்கன்பட்டி , அடைக்கம்பட்டி, நல்லூர், பில்லுப்பட்டி, கல்லுப்பட்டி, கி.பொருவாய், வேளக்குறிச்சி, மருங்காபுரி ,காரைப்பட்டி ,கரடிப்பட்டி, கஞ்சநாயக்கன்பட்டி , கள்ளக்கம்பட்டி, சிங்கிலிபட்டி, M .இடையப்பட்டி , பழைய பாளையம் ஆகிய பகுதிகளில் மின் விநியோகம் இருக்காது ,என மணப்பாறை செயற்பொறியாளர் P. பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

# வானூர் அருகே வரதட்சணைக் கொடுமை: இளம்பெண் தூக்கிட்டுத் தற்கொலை: கணவர் குடும்பத்தினர் மீது தந்தை புகார்

வானூர்: ஜன.5–

புதுச்சேரி மற்றும் வானூர் எல்லைக்கு உட்பட்ட பட்டானூர் பகுதியில், குடும்பக் கொடுமை மற்றும் வரதட்சணைத் துன்புறுத்தல் காரணமாக இளம்பெண் ஒருவர் நேற்று காலை தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



மரக்காணம் வட்டம், பிரம்மதேசம் கிராமத்தைச் சேர்ந்த மணி என்பவரது மகள் அனிதா (33). இவருக்கும் பட்டானூர், கலைவாணர் நகர் பகுதியைச் சேர்ந்த இராஜேந்திரன் – சுகுணா தம்பதியரின் மூத்த மகன் விஜய் ஆனந்த் (40) என்பவருக்கும் கடந்த 2016 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. இவர்களுக்கு வைஷ்ணவி தேவி (9) மற்றும் கேசவ் ஆனந்தன் (7) என இரு குழந்தைகள் உள்ளனர்.

இவர்களுக்குள் ஏற்கனவே குடும்பப் பிரச்சனை இருந்துள்ளது. இது தொடர்பாக முன்பு காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்ட போது, கணவர் விஜய் ஆனந்த் அரசுப் பள்ளியில் (தென் சிறுவூர் அரசு மேல்நிலைப் பள்ளி) வேலை பார்த்து வருவதால், FIR பதிவு செய்தால் அவரது வேலை பாதிக்கப்படும் என்ற மனிதாபிமான அடிப்படையில், அனிதாவின் குடும்பத்தினர் சமரசம் பேசி அவரை கணவர் வீட்டிற்கு அனுப்பி வைத்துள்ளனர். 2023 ஆம் ஆண்டு அனிதா விஷம் குடித்தபோதும், குழந்தைகளின் நலன் கருதி மீண்டும் சமரசம் செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டார்.

அனிதா வேலைக்குச் செல்லவில்லை என்றும், அவர் அரசுத் தேர்வில் தேர்ச்சி பெறவில்லை என்றும் கூறி கணவர் விஜய் ஆனந்த், மாமனார் இராஜேந்திரன் மற்றும் மாமியார் சுகுணா ஆகியோர் தொடர்ந்து அவரை அவமதித்து வந்துள்ளனர்.

அதிர்ஷ்டம் இல்லாதவர்.

அவர் வீட்டில் இருப்பது "அதிர்ஷ்டம் இல்லாத நாய் வீட்டில் இருப்பது போன்றது" எனக்கூறி மனரீதியாகக் கடும் சொற்களால் துன்புறுத்தியுள்ளனர்.

கடந்த ஜனவரி 2ம் தேதி மதியம், "வீட்டை விட்டு வெளியே போ அல்லது செத்துப்போ" என மாமியார் சுகுணா மிரட்டியதால் அனிதா கடும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளார்.

இந்தத் தொடர் கொடுமைகளால் மனமுடைந்த அனிதா, (03/01/2026) காலை சுமார் 7:00 மணி அளவில் தனது வீட்டில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

தனது மகளின் மரணத்திற்கு வரதட்சணைக் கொடுமை மற்றும் குடும்பத்தாரின் மிரட்டலே காரணம் என்றும், இதற்கு காரணமான கணவர் மற்றும் அவரது பெற்றோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தந்தை மணி காவல் துறையில் புகார் அளித்துள்ளார். போலீசார் இது குறித்து வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## திருச்சியில் கஞ்சா விற்றவர் கைது

திருச்சி ஜன 5:

திருச்சி ,தில்லை நகர் , வாமடம் அருகே கஞ்சா விற்பனை நடப்பதாக தில்லைநகர் போலீசாருக்கு தகவல் கிடைத்தது.இதனை தொடர்ந்து போலீசார் அங்கு சோதனையை நடத்தி கஞ்சா விற்ற மண்ணச்சநல்லூர், நொட்சியம் குமார குடியைச் சேர்ந்த கரிகாலன் ( 53 ) என்பவரை போலீசார் கைது செய்தனர். பின்னர் ஜாமினில் விடுவித்தனர் அவரிடமிருந்து 150 கிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

# சேலம் சுகவனேஸ்வரர் கோயிலில் ஆருத்ரா தரிசன விழா. திரளான பக்தர்கள் சுவாமி தரிசனம்.

சேலம். ஜன. 5–



ஆருத்ரா தரிசனத்தை யொட்டி, சேலம் சுகவனேஸ்வரர் கோயில் உள்பட மாவட்டத்தில் உள்ள சிவாலயங்களில் திரளான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர். பழைமைவாய்ந்த சுகவனேஸ்வரர் கோயிலில் ஆருத்ரா தரிசன விழா தொடங்கியது. கிழக்கு ராஜகோபுரம் முன்பாக நடராஜர், சிவகாமி அம்மன் சிலை வைக்கப்பட்டு பல்வேறு திரவியங்களைக் கொண்டு விடியவிடிய மகா அபிஷேகம் நடைபெற்றது.இதில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் குளிரையும் பொருட்படுத்தாமல் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து நடராஜருக்கு சிறப்பு அலங்காரம் செய்து மகா தீபாராதனை காட்டப்பட்டது. ஆருத்ரா தரிசனத்தில் காட்சி அளித்த நடராஜரை ஏராளமான பக்தர்கள் வழிபட்டனர்.

தொடர்ச்சியாக, மூலவர் சுகவனேசுவரருக்கு தங்கநாகாபரணம், சுவர்ணாம்பிகை அம்மனுக்கு தங்கக் கவசம் அணிவித்து சிறப்புப் பூஜை நடைபெற்றது. தொடர்ந்து சிவகாமி அம்மன் சமேத நடராஜர் சிறப்பு அலங்காரத்தில் வீதிஉலா வரும் நிகழ்ச்சி நடைபெற்றது.

முன்னதாக கோயிலுக்கு நேரில் வந்து தரிசனம் செய்ய முடியாத பக்தர்களின் வசதிக்காக கோயில் நிர்வாகம் சார்பில் நடராஜர் அபிஷேகம் நேரலையாக யூடியூப்பில் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

இதேபோல, உத்தமசோழபுரம் கரபுரநாதர் கோயில், சேலம் இரண்டாவது அக்ரஹாரம் காசி விஸ்வநாதர் கோயில் உள்பட மாவட்டத்தில் உள்ள சிவாலயங்களில் ஆருத்ரா தரிசனம் விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்துகொணடு சுவாமி தரிசனம் செய்தனர்.

# ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையம் சார்பில் திருப்பாவை ஒப்புவித்தல் போட்டி மற்றும் நாட்டியாஞ்சலி..!






திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையம் சார்பில் மார்கழி மாதம் முன்னிட்டு மாணவர்களுக்கான திருப்பாவை ஒப்பித்தல் போட்டிகள் மற்றும் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி கோட்டை ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் கோவிலில் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு ஸ்ரீமந் நாதமுனிகள் வைணவ சபை தலைவர் கு.மணிவண்ணன் ராமானுஜதாசர் தலைமை தாங்கினார். பூங்குயில் சிவக்குமார், வந்தவாசி வட்ட தமிழ்ச் சங்க தலைவர் வே.சிவராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்வி மைய முதல்வர் பா. சீனிவாசன் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக, வந்தவாசி வட்டார வளர்ச்சி அலுவலர் ஏ.பி.வெங்கடேசன் பங்கேற்று, மார்கழி மாதத்தில் குழந்தைகளின் ஆன்மீக பங்களிப்பையும், குழந்தைகள் எவ்வாறு உடல் நலத்தை பேணி காக்க வேண்டும் என்பது பற்றியும், மாணவர்களின் உடல் நலம் மற்றும் மன நலத்தை பாதிக்கக்கூடிய செயல்பாடுகளை பட்டியலிட்டும் பேசினார். மேலும் திருப்பாவை பாடல்களை ஒப்பித்த மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார். மேலும் இந்த நிகழ்ச்சியில் கலைச்சுடர்மணி பெ.பார்த்திபன், ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் கோபாலகிருஷ்ணன், டாக்டர்கள் பாமாபதி, தனபதி, வழக்கறிஞர் குமார் ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர். மேலும் நிகழ்வில் முனைவர் ம.மகாலட்சுமி எழுதிய 'சூடிக்கொடுத்த சுடர் கொடி' திருப்பாவை நூல் மறுபதிப்பு வெளியீடு செய்யப்பட்டது. முன்னதாக, ஸ்ரீ கிருஷ்ண லீலாமிர்த பஜனை குழு சார்பில் நாமசங்கீர்த்தன பஜனை நடைபெற்றது. மாணவர்கள் ஆண்டாள் நாச்சியார் முகமூடி அணிந்தவாறு பாடல்களை பாடினர். இறுதியில் திருமலை திருப்பதி தேவஸ்தான திருப்பாவை சொற்பொழிவாளர் ஆர்.சீனிவாச பெருமாள் ராமானுஜதாசர் நன்றி கூறினார்.

## திருச்சி மாவட்டம் மணப்பாறையில் , மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் :




மணப்பாறையில் , வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுராவையும் அவரது மனைவியையும் வீட்டு சிறை பிடித்து நாடு கடத்தியதாக அறிவித்த அமெரிக்காவின் அடாவடித்தனத்தை கண்டித்து இந்திய கலாச்சார நட்புறவு கழகத்தின் (இஸ்கப்) , மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் மணப்பாறை பேருந்து நிலையம் முன்பு நடந்தது.இந்நிகழ்வில் இந்திய கலாச்சார நட்புறவு கழகத்தின் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421